**O.P 44 of 2020**

Date : 18.11.2025

எ.சா.1 : சிவகாமி

<u>எ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

இந்த மனுவை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் கருப்பசாமி போட்டுள்ளார். அவர் எதற்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் விவாகரத்து கேட்டு வழக்கு போட்டுள்ளார். 01.12.2016 ம் தேதியில் எனக்கு மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது. மனுதாரர் போட்டுள்ள மனுவை நான் படித்து பார்த்துள்ளேன். திருமணத்திற்கு பிறகு நானும் மனுதாரரும் சென்னையில் குடியிருந்து வந்தோம். அவர் போஸ்ட் மாஸ்டராக வேலை பார்த்து வருகிறார். நான் நேரத்திற்கு நேரம் மாத்திரைகள் சாப்பிடுகிறேனா என்றால் சாப்பிடுகிறேன். மாத்திரைகள் சாப்பிடாமல் இருந்தால் என்னால் இயல்பு நிலையில் இருக்கமுடியாது என்றால் சரியல்ல. இருக்க முடியும். திருநெல்வேலி இராமானுஜம் மருத்துவரிடம் சிகிச்சை பெற்று கொண்டிருக்கிறேன். நான என்ன மாத்திரை சாப்பிடுகிறேன் என்றும் என்ன சிகிச்சை பெற்று வருகிறேன் என்பதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். மனுதாரர் எனக்கு சென்னையில் இருக்கும் போது உடல் நிலை சரியில்லாமல் போன போது மருத்துவமணை அழைத்து சென்று காண்பித்தார் என்றால் சரிதான். மனுதாரர் சொல்வது போல் சென்னை மருத்துவமணை அழைத்து சென்று காண்பிக்கும் முன்னர் நான் இயல்பு நிலையில் இல்லை என்றால் சரியல்ல. திருநெல்வேலி இராமானுஜம் மருத்துவரிடம் எத்தனை வருடங்களாக சிகிச்சை பெற்று கொண்டிருக்கிறேன் என்றால் சுமார் 10 ஆண்டு காலமாக சிகிச்சை பெற்று வருகிறேன். மாத்திரை போடுவேன். நான் தூக்க மாத்திரை சாப்பிடுகிறேனா அல்லது மனநிலை சரியில்லாமல் இருப்பதற்கான மாத்திரை சாப்பிடுகிறேனா என்று மருத்துவரை விசாரித்தால்தான் தெரியும் என்றால் சரிதான். இன்று நான் நீதிமன்றத்திற்கு தனியாக வந்தேனா என்றால் என் தாயாருடன் வந்தேன். என் அம்மா இல்லாமல் நீதிமன்றத்திற்கு வரஇயலாது என்றால் தனியாக வந்ததில்லை. என்னால் தனியாக வரமுடியாது என்றால் சரிதான். (சாட்சி நான் டாக்டர் என்று சொல்கிறார்). சாட்சியிடம் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் எ.சா.ஆ.1 ஆவணமான சான்றிதழை காண்பித்து அது என்ன சான்றிதழ் என்று கேட்ட போது சாட்சி அது Bachelar of Arts என்றும் ஆனால் தான் டாக்டர் ஆபிஸ்

மேடம் சொல்வார்கள் என்றும் சாட்சியம் அளித்தார். தற்போது நான் சாட்சி தான் லாயர் என்றும் சாட்சியம் அளித்தார். எதிர்மனுதாரரின் முதல் விசாரணை சாட்சியத்தை மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் எழுதப்பட்டுள்ளது என்று கேட்டபோது அதில் ஒன்றும் இல்லை என்று சாட்சியம் அளித்தார். நானும் என் கணவரும் ஒருநாளும் தாம்பத்திய வாழ்க்கை வாழ்ந்தது இல்லை என்றால் தாம்பத்திய வாழ்கை என்ன என்று எனக்கு தெரியாது. நான் இயல்பான நிலையில் இல்லை என்றும் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எனக்கும் மனுதாரருக்கும் நடந்த திருமணம் ரத்து செய்யவேண்டும் என்றால் சாட்சி அதற்கு தான் IAS என்று கூறினார். மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட பிரச்சனை சம்மந்தமாக மனுதாரர் எல்லா மருத்துவமணைக்கு அழைத்து சென்றும் அதை சரிசெய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்கக்கூடிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் மனைவி என்ற முறையில் மனுதாரரிடம் நடக்காததால் மனுதாரர் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.